மென்வல்லமை குறையக்கண்டேனென்க (௰க)

கதிருண்டமணியிற்சித்துக் களியுண்டவெசித்துநாட்டி
லெதிருண்டபகையொன்றின்றி யியலுண்டாண்டொருவ
முதிருண்டவிறைவராக முயலுண்டவணக்கங்கொண்ட [ன்
பொதிருண்டவெனதுமேன்மை பொருகவெனவிரியக்கண்டே

உரை — விளைந்தவொளிசெய்மணியாற் சிறந்துகளிகூர்
ந்தெழுந்த வெசித்துநாட்டி லெதிரும்பகையுமின்றி யியல்
பெறநானொருவனாளாநின்றேன், இப்பொழுதங்கேபழமை
யிற் றேவராகவணங்கப்பட்ட வெனது நிறைந்தசேனைக
ளெல்லாந் துணுக்கெனவெருவியிங்கே விழவேகண்டேனெ
ன்க. (௰உ)

கார்தவழ்வரைகடோறுங் கடிமலர்ப்பொழில்கடோறு
மோர்தவழ்புரங்கடோறு மெண்ணருமிடங்கடோறுஞ்
சீர்தவழ்சிகரத்தோங்கிச் சிறந்தவாலயங்கள்யாவும்
போர்தவழ்களங்கடேவும் பூழியென்றாகக்கண்டேன்

உரை. — மீளவு மேகங்கள்தவழுமலைகடோறும் வாசமல ராப்பூத்தசோலைகடோறு மழகிற்பொலிந்தவூர்கடோறு மற்றெண்ணப்படாத பலவிடங்கடோறு மழகுபெறக்கட்டியிருந்த சிகரத்திற்சிறந்தகோயில்கள்யாவும் போர்க்களத்தெழு நுண்டுசியொப்பத் தகர்ந்து தூளாய்ப்போனதாகக்கண்டேனென்க. (௰௩)

பொன்முகத்தொளியைத்தும்மும் பூஞ்சனையுருவம்
பூண்ட
மின்முகத்தெறிக்குங்கற்றை விரிமணிமுடியுந்தாரு
மலமுகத்தணிடபொற்றேரு மற்றணிசிறந் யாவுங்
கொன்முகத்தலைகையோடுங் குழைந்தழிந்தாகக்கண்டேன்

உரை — மீள்வும் பசும்பொன்வாயாலொளியைத் தும்மியழகுபெற நற்சனையார்ந்த தேவருருவங்களு மவ்வுருவங்களணியாய்ப்பூண்ட மின்னிவிளங்கிய மணியொளிமுடிகளு மநரிமணியடங்களு மங்காகழகுளபொற்றேர்களு மற்றச்சிறந்தவணிகள்யாவும வீணாய்ப்போயிங்கேசிழுந்த பேய்களோடுந் தாழும்விழுந்தழிந்ததாகக்கண்டேனென்க. (௰௪)

நிரந்தருங்குலவினைந்து நாடொழிந்தோடினரை
வரந்தருந்தேவராக வணங்கவோவென்னையாருஞ்
சரந்தரும்பூவுஞ்சாத்தாச் சாந்தமூர்புகையுங்காட்டாப்
பரந்தருங்கமழ்திராட்டாப்பணிதலொன்றினையுங்காணேன்

உரை — மீளவு மெசித்துநாட்டிலுள்ளவெல்லாரு மானதைக்கண்டு பயந்து மெலிவெய்தி நாட்டைவிட்டோடினவரை யினிநாம் வரந்தருந்தேவரெஃறெண்ணவும் வணங்கவுஞ்செய்வோமோவென்று நமக்கு மதுமலர்மாலைகளைச்சாத்தாமலுஞ் சந்தனமும் பூம்புகைகளையுங்காட்டாமலு முன்

னைப்போல வரசிராட்டாமலு மொருவணக்கத்தையுநடத்
தக்கானெனென்க (௰௫)

பணிமுகத்துயிர்கட்கேடாய்ப் பண்ணிளியருமுபோற்
றணிமுகத்தவர்ந்தசாகி யரிதெலாப்பிணிகடீர்ப்ப [தி
மணிமுகத்திலுறவன்றறந்த வரத்துறைந்தனபேயோடித்
துணிமுகத்திலவயோர்ந்தன்னார் தொழுகல்விட்டிருப்பக்க
ண்டேன்

உரை — மீளவும் எருமமாபுரத்தண்டையிலிருந்தமரத்தி
ற்குச்செய்வணக்கத்தா லுயிர்கள் பாவங்கொண்டுகெடும்ப
டி நெடுநாளவர்வணங்கி யழகிதாகமலர்ந்தமரமே யிப்பொ
ழுதரிதாய் நோய்பிணியாலவயுத்திர்க்கும்படி யதற்கண்ட
வன்றற்கேவரத்தினு லம்மரத்திரதுடியாய்நின்றபேயுமோடி
யிவையெல்லாவற்றையுந் தெளிவாகவவராராய்ந்து அம்மர
த்தையும்வணங்காமலிருப்பக்கண்டேனென்க (௰௬)

இத்திறத்தெவரேச்சாரு மெனைநகைத்திகழ்ச்சிகூற
மைத்திறத்துயலோர்கோண்மை வகைசயினேடழியக்கண்டே
யத்திறத்தனைத்துமாக்கி யிமையவையனுகப்பார்க்கின்
மெய்த்திறத்துயரென்காட்சி மெலிதரவொன்றுங்காணேன்.

உரை. — இவையெலாமாசையி லெவ்விடத்தாருமென்னை
நகைத்து நிந்தையைச்சொல்லும்படி மனிதரையக்குவிக்
குந்திறத்திறபொலிந்த வெனதுகோண்மை வசைபடவழியவு
ங்கண்டு, அங்ஙனமத்தனையுஞ்செய்த நம்மைக்கொல்லும்ப
கையையறியும்படி யங்கேபோ யாராய்ந்துபார்த்தவிடத்து
த் தப்பாதவெனதறிவாண்மை மெலிவெய்தி பொன்றுங்கா
ணேனென்க (௰௭)

காட்சியாறெளிந்துபார்க்கிற் காரணமியாதோநாடி
மாட்சியாலுயரந்நாட்டில் வந்திருபூதர்கண்ட
சூட்சியாலவமிதொன்றே துளங்கறத்துயர்ந்தோரோனும்
பூட்சியாலுளைந்தோராகிப் புரியுமோர்கருமமுண்டோ.

உரை — அங்ஙன நாட்டனன்னறிவின்கூர்மையா லெல்லா வற்றையு மாராய்ந்துதிரிகையி லேதோகாரணத்தைப்பற்றி மாட்சியிற்பொலிந்தவெசித்துநாட்டி லிரண்டிபூதராகிய மரியுங்குகையும்வந்ததாக வென்றாட்சியா லங்கேகண்டனாக னமியதொன்றே யவ்விருபூதர்களங்கிடவறத்திறலுயர்ந்தோ ர்தானேயாயினு மவர் தரித்திரரா யுடல்மெலிந்துளோர்ந்துதிரி வராகையி லவராவர்வதுண்டோவென்க (திருக்குமாரனையறி யாமையா லவனையெண்ணுமவிருபூதமென்றனனென்க.) (௰௮)

நான்வினைவஞ்சத்தொல்கா நஞ்செனவின்பம்வெஃகா
ஆன்வினைதுப்பிற்குற்ற வனைவினைபுகழினோராக்
கான்வினைதவத்திலொல்லாக் காத்தமானவிருவரோனும்
வான்வினைபலக்குநீர்தவ வயத்தலாலஞ்சேனுமே

உரை — அவ்விருபூதர்களாப்பார்த்துப்போது நானவனைக் கெடுக்க நெடுநாள்செய்த வஞ்சத்தந்திரங்களுக் கஞ்சபாமலு நஞ்சினைப்போலப் பூவுலகுளளவினியபாம்புகளைவிரும்பாமலுஞ் சரீரத்தைப்பற்றவருந் துன்பங்களின் மனங்குழையாமலுஞ் சொல்லத்தகும்புகழினமேலாயக் காட்டு, நல்லயியப்படுந்தவநிகராமற் றம்மனத்தையு மைம்பொறிகளையுங் காத்ததவத்தின்மாட்சியையுடையவ ரிருவருந்தாமேயாயினும் வானுலகுள்ளோர்முதலா லுடையனபயனைத்தாலு மாண்டவனுக்கொடிய வெவ்விக்குமஞ்சேனுமென்க (௰௯)

தனையாவு மாயவழியுமேவாய
மாயினுமறிகிலாநா னனைவருமடுகதல்செய்தேதீ
வியினுங்கொடியநெஞ்சர் வினைநக ழ துபார்வையாதுயி
வியினும்புரியுந்தன்மை விளம்பரும்வருமன் வெறுந்த

உரை — இவைபெலாமிங்ஙனமாகிய மனவலிமையாலாம்வந்த வழியுந்தன்மையு மாராயினு நாங்களறியாமையா லுமமையெல்லாவையுமறுத்தேதல், இவ்விக்கள வவப்புவியிலுங் கொடியநெஞ்சினையுடையோரோ வந்தவிடையுருவிபலா நதிராதாயினுந்திர்ந்தாயினுஞ் செயயவேண்டியகருமங்களைல்லிக்காட்டுவீராகவென்றான் பேய்க்காரனென்க. (௨௰)

கடாவியவசனியன்ன கலைகொள்ளரசைநோக்கித்
தடாவியசரணமேத்தித் தரணியாவையுமேய்த்தேய்க்கப்
படாவியந்தரத்துள்வஞ்சம் பழுத்தகூர்மதியின்வல்லான்
சிடாவியனென்னுங்கூளிதியுமிழ்ந்துரைமுன்கொண்டான்

உரை.—அங்ஙனஞ்சொல்லி யிருஞ்சிலைகடாவினவிடியை ப்போலப் பெருஞ்சவலையுட்கொண்டு நின்றவப்பேய்க்கரச னைநோக்கி யவனடிகளைத்தடவிவணங்கிப் பூவுலகெல்லாமே ய்த்துத் தாமேய்க்கப்படாதபேய்களினுண் மிக்கவஞ்சத் தாற்பழுத்ததுபோலக் கூர்ந்தவறிவின்வல்லவனாய்ச் சிடாவி யனென்னுமொருபேய் வாய்வழியாக வழலைத்திரளாயுமிழ் ந்து முன்னேயுரையைக்கொண்டானென்க (வியந்தரமெ ன்பது பேய்தானென்க) (உக)

வேறு.

குய்யங்கொண்டார்கண்டவையெண்ணிக் குறையெண்
ரய்யங்கொண்டாலாரறிவெஞ்சி யரிதுய்வார் [று
மொய்யங்குண்டாய்வானிழிநாளின் முரிவென்றே
வய்யங்கொண்டாரேற்றியகோலின் வலிகொண்டோய்.

உரை.—சிடாவிய னெங்ஙன சனையுடையார் கண்டயாவையு மனதிலெண்ணிப்பார்ப்பா ரொழிய வவற்றாற் றமக்குக்குறைவந்ததென் றையங்கார், அ ச்சங்கொண்டுமயங்கின லறிவும்மயங்கி யயர்தபயிப்பிழைப் பதரிது, முன்னுளில் வானுலகத்திலாய போர்முகத்தி னுந் தோற்றுவீழ்ந்ததினுல் வந்ததேதென்ன? அதனையின்றல் லோ பூவுலகெல்லா முன்னைவணங்காநிற்கப் பெருஞ்சீர்ச் செங்கோலேந்தி வல்லமையோ டாண்டுகொண்டிருக்கின்று யென்க (உஉ)

ஐயின்வாயாற்றம்மறிவெஞ்ச மயலுய்க்கு
மெய்யின்வாயாலீனமலிந்த வினைமாக்கள்
பொய்யின்வாயாற்பொங்கடலாறும் புரிகின்ற
மொய்யின்வாயானிற்பவர்கொல்லோ முரியாதார்.

உரை. — உளத்திருள்மொய்த்தவழியாற் றம்மறிவொளி யேகெடும்படி மயக்கத்தைக்கொண்டுவிடுமுடலைப்போர்த்த தற்கு வினையும் வினையு நிறையக்கொண்ட மனிதராகையிற் பொய்யைக்காட்டியதன்மையிற் பொலிந்தவல்லமைகொண்டு நாமவர்க்குச்செய்யும்போர்முகத் தவரோமுறியாமனி ற்பாரெனக (ஆகையி லெசித்திடைவந்தகேடு மீட்பதெனி தென்பதுகருத்து) (௨௩)

ஆய்ந்தாய்ந்தெல்லா நீயறியாதோன் றறைவேறோ
மாய்ந்தகனமைந்தனென்றறிதைய ன மனம்வாடக்
காய்ந்தார் துன்பந்தீர்ப்பமகனறன கவிழ்ப்ப
வேய்ந்தான்வாய்ந்தோர்நல்லொருவன்பின் வினையாற்றான்.

உரை — மனிதர்தங் குணந் திலங்காட்டும்படி சிடாவிய ன் றன்றொலாகியசிறிதுசெய்தியைச் சொல்லத்துடங்கினான்: ம னவ நீ பல்லாவற்றைபுமாராய்ந்தமையா லறியாதவொ ரு செய்தியு முனக்குநான் சொல்லவோ? ஆயினுஞ்சிறிதுகே ட்பாயாக, முன்னொருவ னொருவன் றன்மகனிறந்தானென்று மனம்நொந்துவாட்டிக் காய்ந்ததுன்பமாறுமென்று பிள்ளைமே ல்வைத்த வ னயின் ... விறந்தமகனுருவொப்ப வழகியவோருருவத்தைச்சமைத்தலங்கரித்தானெனக (௨௪)

ஐ நக்கண்டேவர்செய்பவர்காதை கடிதுற்ற
மைக்கண்பிள்ளந்தேறுமெனத்தாம் வழிபாடாய்ப்
பொய்க்கண்டேறும்பூவொடுவாசப் புகைசாத்தி
மைக்கொண்டோர்தறமெய்வதமென்று ரதிவற்றார்

ப்பற்றிக் தகப்பனுக்கேவல்செய்திருந்தவரோவென்னிற் ற கப்பன்வருந்திக்கொண்ட மயக்கத்தைக்கண்டு - அவன்மன மகிழ்ந்திருக்கும்படி யவர் தேவபூசையாக மதுமலர்ப்பூவு ம் வாசம்பொழிபூம்புகையு மவ்வுருமுன்னேகாட்டிப் பொ ய்யிதென்று தம்மனமறிந்து மதிகெட்டவரா யழகியவோ ர் தெய்வமிவனென்று சொல்லத்துடங்கினாரெனக. (௨௫)

செய்யுந் தகைமைத் தாயவை கேட்டுத் திருவல்லோன்
வெய்யுந் தகைமைச் செய்யனை யேத்த விரிபார்மேற்
செல்லுந் தன்மைத் தூர்ச்சனை நிருசத் துசனாக்க
மெல்லுந் தகைமைச் சேரியுறம் போனை யெழுகின்றார்

உரை — அங்ஙனம் பலவகைப்பட்ட துயருழக்கையினை மநுவுக்குத் தகப்பன் செய்தமையைக் கேட்டுச் செலவுயிக்கா. மொருவ னிருவரு சிறப்புப்பெறும் தாயிறந்ததன் மகப்பயனுக்கு நடத்தி யவனைவனைக் காத்துச் சென்லுக மைப்பா ருள்ளட்டத்தி லே விரதத்துப் புவனம் பலவிடங்களிலே பலவர் காரணங்களை யிக நடக்கப்புப் பாவங்களை யுந் தனமைத்து மனிதர் துணையி லா மிக்கதூற்றி யெப்பாருமிகு மெப்பாருய்ந்துதருமெ யக்கட்டுமைமறந்து ஓராய (உசு)

எய்யாவுருக்கட்ட புறநாடே வெளிநிவ்வாயி
வெய்யாதா யுறைந்தன மையுந்த்த விளையுய்க்கும்
பொய்யாவருசக்துயர்த் தனவெய்யம பலமேயர்
மெய்யப்பயனைத் தவமைக்கூறமையுந் துயருழந்தாய்

உரை — அங்ஙனமைய பெருமையினி நீரதில் விரும்பிய நாலே மியைப்பி பெள்தாய் பெய்யானேகடவுநகுமா ர்த்தன் செய்யவேண்டிய காரிதம் மநுத்தத் துப்பாயற வெல்லவினைவிசுத் மெல்லவருசப் பிறைப்பொண்டிட்ட பல பொய்யாமைகள் பலவாமைப்பிப பொருளு தெவதுய கட்ட க்கட்டமாயவனையைக் கண்டாய் பெயன்க (உஎ)

உஅ மெருப்பமாக்கட்ட நாதனத் ேத துணைவெ ரோ
சா ருெப்பப்பதுஞ் சோலையசிந்தார் கசிந்து
வாச ருெய்பி பொலொல்லுபுதின்றான் வலியேதத
நாயரைருபவருஞ் சஞ்சாலவைசனைசொன்று னைவயிக்கான்.

உரை — அங்ஙன முடைக்கொண்டமாக்கட்டுணைத்திற மித்தனிக்கைத்தாயி னிப்பொழு தெசித்திட்டுத்தாயவை கண்டு குறைவமேனய? வாசமதுமலர்ச் சோலையிற் பொலிந்த தெ சித்துநாட்டிலுள்ளயாவரு மனைவுந் தீவினைகொண்டு யின்

லைவொலிக்கும் பீக்கிரத்துத்தம்மனத்திருப்பியுனதடிவல்லமை
யைவணக்கும்படி நாவொருவனுள்ளவருச்சமே போதுமெ
ன்றான் பாவம்வினைவிக்கும் கிடாவியனெனக்க (௨௮)

என்றனன்றனென்றதைக்கேட்டா
வின்றென்பான் பஞ்சியமாயை வினைவல்லா
ரின்றான்முன்பானென் றகிழ்ந்து நிறைநக்குப்
பொன்றான்றுணைசேர்த்திப் புகழுந்தான்

உரை. — அங்ஙனங்கிடாவியன்சொல்லச் சொன்னதைக் கேட்டபாவநல்லதென்றா, லின்றென்றுமொருமை யோவெவனின் மாயைவிஞ்ஞை விதிபொலித்து, வினைவிளைவதற்கு மிகவும் வல்லவனுடைய முன்னையவர்சொன்னதைநிந்தையாக மிகவுநகைத்து முயாபதிட்டனைபெல்லா மனியாகவனிந்து ம வ்வனடனைவசிச்சொன்னதெனாக (௨௯)

வேறு.

காரிநட்டதுரிவாவிலையக்காத்தபுள்
நிரசனிரசனிந்திரபதுகாயபோ
சிரபடுதுனிமானிடர்செய்பருகு
குரபடுதுவிம்தாமொம்மாற்றுவார்

உரை — மாரிகளைவெல்லுவசரிகோ வலர்துணைமெர்வனமென்னில், மாரிகாலத்து நிறைந்தகடாக்கிடைதுக் காத்தருநதடநவை நிலாவ்லாம்பாயபநிடபிடபு அடாகேநிலவாமற்போலவதுபோல மனிதருஞ் செல்வககாலத்துச் செப்புங்கமங்களாத் துன்பகாலத்தவத்தளவிலே விட்டுப் பாவமாக மாற்றுவாரெனக (௩௰)

மைபட்டிறத்துயிரொப்புக்கதுவண்மைபோ
மெய்த்திறதிசைபோல்விடவெய்த்தெனக்
கைத்திறத்துயிர்காத்திடத்தான்செயு
கேடுறவாக்கினேன்.

உரை — சிட்ரவியன்சொன்னபடி பாவத்திருளே மொய்த்தவுயிராயுள்ளமனிதனையேய்ப்பது வல்லமையென்பவோ? தானே மெய்யின்வழியா னிகரிலசிறத்தையுடையகடவுளின் வல்லமைதன்னை யேய்த்தாற்போல வலன்றன்வல்லமைகொண்டு மனுக்குலத்துயிர்களை யிரட்சிக்கும்படி தான்செய்ததைக்கொண்டு தானவ்வுயிர்களுக்குக்கேடுவரும்படிசெய்தேனேயென்க (௱௧)

சாலேயசத்தினை நீங்கவத்
தழன்மசானுறிபூதானறத்தித்
தழாறசொற்கலறயோன்றருமேவலர்த்
சழனறாரவுயிர் துய்த்தனசால்பரோ.

உரை — சொன்னதையெங்ஙனஞ் செய்ததென்றுசொல்லத்தொடங்கினார். நிழலிறபொலிந்த சோலைகளினைறந்த செசித்துநாட்டைவிட்டுத் திசைசுடுகானத்துவழி புதர்வருகையிலாணடவறதக்குறையாக முறைப்பாம்பிகளாச் சொரானதிருலவன்சொற்தமக்கவினபாம்புகள் திரளாய்மத் தலைக்கடித்துயிர்வுயவொகாள்னறனெடைக (௱௨)

ஒலியேயங்கியுன்னந்தினறவேண்டினார்
மேவிவேண்டினர்மேவுகளுண்டகை
யேமே யிசன்னொருபார்களைச்
சாவிலாமபடி தம்பிரத்தாக்கருன்

உரை — ஆண்டவனேவலினுக் மொய்த்தபாம்பின் கடியாற் றிராணயிறப்பதுகண்டு மதாத்தேவசியாண்டவனை வேண்டினார், அங்ஙனந் தன்னைபண்டிவேண்டினார் மேவிரக்கிலகடவுளவினிணுல் அவர்க்குத்தலைவனுக்கயமாயிசன சிக்கிரமா யினிபொருவருஞ்சாகாதபடி செம்புனொருபாம்புருவத்தைச்செய்தானென்க (௱௩)

ஆக்குகின்றவராவொருகம்பமேற்
றாக்குகின்றனர் தூக்கியபாந்தளை
நோக்குகின்றனர் நோயகிறஞ்சினை
நீக்குகின்றுயிர் நிற்கிலருய்வரே.

உரை.—அங்ஙன மோயிசன் செம்பினாற் செய்த பாம்பினை யொரு கம்பத்தின் மேலேற்றி வைத்தான், அங்ஙன மேற்றிய பாம்பினைப் பார்த்தமாத்திரத்திற் பாம்புகளாற் கடிபட்ட யாவருங் கடித்த பாம்பினஞ்சு போய்ச் சாகாமற் பிழைப்பா ரென்க (௫௪)

வாய்ந்த நன்றி மறப்பது தீதென
வாய்ந்த தன்மை பராவழியாதுபின்
வேய்ந்த தம்மவர்க் காண்டகை மேவிமுன்
னீய்ந்த நன்றியி தென்றவர் சாற்றுவார்

உரை — அங்ஙன மாண்டவன் றமக் கையமறப்பது தீதென் றெண்ணி யதைமறவாதபடி யாண்டவனேவிச் செம்பினாற் செய்யப்பட்ட பாம்பினை யழியாம லவ்விடையூறு போனபின்னும் வைத்திருந்து பிற்காலத்துவந்த தம்மக்கட் கதைக்காட்டி முன்னொரு கடவுளதைக் கொண்டு தமக்குச் செய்த நன்றியின்னதென்று சொல்லிக்காட்டுவா ரென்க. (௫௫)

புனைதருந் தடம்பதி தனைப்புக் குநா
டதருங் கடவீதி யிதென் றவர்
வினைதருஞ் சுகையு மவெறிமாலையு
முனைதரும் புகழோடிட நாட்டினேன்.

உரை — இவையெலாங்கண்டு நான் பரவநுமையுள்வழி யிதென்றெண்ணி யுட்புகுந்து நீதிநாயாமென்று நான் சொல்லவைரப்பாப புருஷன் முன்னே வாசபுகைகளையு மணமலர்மாலைகளையுஞ் சாத்திப் பலபுகழ்களைப் பாடும்படி முறையை நாட்டினே னென்க (௫௬)

முன்னிருந்தனர் காலமுடித்தபின்
பின்னிருந்தனோ பேரொழிற் பார்த்தனுக்
கென்னிருந்தனிச் சூட்சியினை வலான்
றனமந்திரமாக்கி

உரை — அங்ஙன முன்னிக்கதையெலா நடந்தகாலத்தி ருந்தவரிறந்து பின்னேநின்றவர் நிசராத வென்னரிய சூட்சி

யினேவலினு லிவ்வழகுள்ள பாம்பினுருவத்துக் கேற்றுயர்ந்த பொற்கோயிலைக்கட்டினனெனக (௩௭)

மாகநாதன் வலத்தவை மாற்றியந்
நாகமாக்கிய நன்றியை நெஞ்சுறா
னாகராசனை யும்பொனாட் டிக்கே
டாகநாகத் துருச்சனை யாயதே

உரை — அப்பொழுதுபாயமாய் நானுழைத்து வான்றந் தனுகிய கடவுளை செய்நன்றியை மாற்றி யந்நாகநாசனே முப மேனுனையிரட்சித்துச் செய்தன்மையுமென்று நாகநா தனைச் சூழும்பெயரு மகத்தாஞுட்டி யதனுவர்கெடும்ப டிபாம்பினாலும் நிலைகொண்டாயிற்றெனக (௩௮)

நாகநாதனை நம்பவினுகவா
யாகமாறுமென் றாகமம்போ லுறந்
பாகமாய்விட முடியபற்கதை
யாகமாநிலத் தர்ச்சனை நாட்டினேன்

உரை — மனவு நாகப்பாம்புக்கு நாகநாதனென்னும் பெயரானாட்டினைபினை ரந்நாகநாதனை நம்பினுற் கடித்த பாம்பினஞ்சமாறுமென்று சொல்லிச் சருக்கரைமேலேபூசி நஞ்சினைமுழுதனைக் கொள்ளுமையால் வேதநூலாகமம்போலப் பல கதைகளையுங்கொண்டு விட்டுப் பூவுலகெங்கு நாகநாதற்கார தனைநாட்டினேனென்க (௩௯)

ஆண்டங்காயிரத்தைம்பத்திரண்டுபோய்
மாண்டகோனெனைக்கரியன் மனம்பொருப்
பூண்டபாத்தனைப்பூமியையாக்கினு
ணூண்டவாச்சனைபற்பலர்விட்டிலார்

உரை — அங்ஙன மாண்டவனேவலினுன் மோயிசனைப் பாம்புருவத்தை யுண்டாக்கினபின்ன ராயிரத்தைம்பத்திர ண்டுவருடம்போய் யூதர்நாட்டையாண்டிருந்த மாட்சியிற் பொலிந்தவெசக்கியனென்பவ னவ் ரப்பாம்பினைவணங்கி

னைக்கண்டு மனம்பொறாமற் கோபித்து மிக்கலங்கரித்தவ
ட்பாம்பினுருவத்தையழித்துத் தூளாக்கினான், ஆயினுமி
ன்னமன்றுதொட்டுவந்த நாகநாதனாகிய பாம்பின்வணக்க
த்தைப் பலரும்விடாமற் சிலதேசங்களில் வணங்குகின்றாரெ
ன்க (௪௰)

அறம்வழங்கிடவன்பொடுநாதனைப்
புறம்வழங்கியவின்னவைபொய்யொடு
மறம்வழங்கிடமாற்றியபின்னொன்
திறம்வழங்கிலதிருமுண்டோவென்றான்

உரை — அங்ஙன நல்லறம்வழங்கும்படி யன்போடுகட வுள் நாகரிடத்துநடத்தின வினைவையெல்லாவற்றையு நான்பொ ய்களைக்கலந்துமாற்றிப் பாவம்வழங்குதற்காரணமாகச் செய் தபின் எனக்குள்ளவல்லமைக்காகாத துண்டோ வென்றான் வின்றானென்க. (௪௧)

பித்தனாகமப்பேசியதன்மையி
லத்தனதுரைகேட்டரும்பட்டுமை
மொய்த்தநாய்முகத்தனின்முற்றிய
சத்தனென்னும்பேயிவைசாற்றினான்.

உரை — அங்ஙனம் பித்தன் வேசநூலாகமங்களைப்பேசி னபோதவின்றனமொழியைச் சொன்னதைக்கேட்டு மனதிலேவஞ்சநிறைந்த கிழநாய்முகத்துருவெடுத்து நின்ற வனைப் பாவத்தின் முற்றியமனத்தனாய சத்தனென்னு மொருபேயி சொல்லத்துடங்கினானென்க (௪௨)

வேறு.

நீரிறவற்றொக்குளெனநேர்பொருதகான்முன்
றேரிறவற்சித்தியெனவேறுதிரையிற்றக்
காரிறவற்மின்னலெனநேர்கருதிநில்லாப்
பாரிறவற்மன்னுயிர்கடம்பரிசதன்றே

உரை — முன்சொன்னபடி மனிதர்குண மெத்தன்மைத் தோவெனில்: நீர்மேலாகுங்குமிழிபோலவு மெதிர்த்துவீசிப்

டொருசொற்றின்முன்னர் தேரின்மேலாடு மிடக்கியம்போலவு மிடிகளைத்திரளாய்க்கொண்ட வினத்தோடு மேகத்திடத்துத்தோன்று மின்னல்போலவு மனிதருமொழுங்குபடவொன்றினை நினைத்தகாலத் ததிலே நிலைகொள்ளாமற் றிரும்பியாடலே பூவுலகிலுடலோடு தவழுமுயிர்களாகக்கொள்ள வவர்குணமிதுவென்றுணர்க. (௪௩)

இப்பரிசினாயிரமனத்தவரைப்பேய்த்து
மைப்பரிசினங்குடிலமாயையடல்பொய்யாப்
பொய்ப்பரிசினுலகுபுக்கினிதிலாண்டோ
மப்பரிசினிப்பொழுதமைப்பதரிதையா

உரை. — சொன்னதன்மைத்து நொடிக்கொருமனமாக வாயிரமனமாய்த் திரும்பிநிற்கு மனிதரைப்பேய்த்து மயக்கத் தின்றன்மையால் வல்லமைகொள்ளு நமது கொடியமாயை தப்பாமற் பொய்யின்வழியே நாம்பூவுலகிற்புகுந் தினிதிந் நாள்வரைக்கு மாண்டதுள்ள துதானே யாயினு மினி யிமத ன்மைத்தாவ தரிதையாவென்றுணர்க (௪௪)

நோமலிடவந்தபலநூதனமுநோக்கில்
வீமலியசன்றநகலமேதினியிலண்டாத்
தீமலியிருட்செறியுமித்திலசயிலாண்டு
நீமலிநன்வஞ்சனைநிகழ்த்தலலே

உரை — நாமெல்லாரு மிகவும்வருந்தும்படி யிக்காலத்து வந்த பலநவங்களைப்பார்க்குமிடத்தில் மலைப்பூத்து விரிந்த பூவுலகிலண்டாமற செந்தீநிலமா யிருளேநிறைந்த வில்விடமாகிய நரகத்தி லியாண்டுகொண் டுன்வஞ்சனையிங்கேதானே நடத்துவது நல்லதென்றுணர்க (௪௫)

நாய்முகனவின்றவைநகைத்திவனைநாளுங்
காய்முகனெருமேங்கழுமிநோக்கியகத்தான்
போய்முகமுடன்றெரிபுகைந்தெழுவதிங்கட்
பேய்முகவெயிற்றெதிர்திரங்காணுவைத்தான்

உரை. — நாய்முகத்துருவோடு நின்ற சத்துருக்கனன் சொன்னதை நகைத்துக் காய்முகத் திவனை யெப்பொழுதும் பகைத்துத் திருகிநோக்குங் கத்தையுடைய திரங்கரனென்னும் பசாசுபோய் முகத்தி லெரிபுகைத்தெழும்படி மிககோபத்துடனே தேய்ந்தபிறையோடொத்த நீண்டபல்லுகளைக்காட்டிச்சொன்னானென்க (௪௬)

வஞ்சினரொருங்குதொழுமன்னரசமானை
யெஞ்சினனிளைத்தனனிளைத்தவொருகைமைக்
கஞ்சினனறைந்தவையமைந்தயரவேண்டா
தஞ்சினர்துளங்குவர்கொலென்றுரைதுவைத்தான்

உரை. — வஞ்சினரெல்லாரும் வணங்குமிராசாவே மானையின் மெலிந்தவனு யிளைத்தவனு யிளைத்தவொருகைம்பெண்ணுக்கு மஞ்சினனாய் நற்சனுசத்துருக்களைச் சொன்னதற்குப் பொருந்திச்செய்யவேண்டாப, அஞ்சிச்சோம்பினவரோக்காலுமிளங்குவரோவென்றான் றிரங்கரனென்க (௪௭)

என்றலெவ்விடொந்தழுகிலின்றவுருமென்று
நின்றவனிகழ்ந்தெனைநகர்த்தபணநிமிடா
குன்றவெறிகொள்ளொளிகுணுங்கனமுளைத்தாய்
வென்றாவனர்ந்தமிடலோவெனவுரைத்தான்

உரை — அதைக்கேட்டசத்துருக்களை மேகநொந்துயிர்த்தவிடியைப்போல வந்துநின்று என்னைநிந்தைசொல்லும்படி யெனனோடொத்தமேய்நீயோ? பேயினங்கொண்டகாத்திருவுறையும்படி பேயாய்முளைத்தாயே முற்றுந்தழுதுகுறும்படி மாத்திரம் வல்லமையுடையோனே யென்றானென்க (௪௮)

அரங்கவுமிவற்கவனவற்கிவனெள்ளொத்த
தரங்கமெனவோங்கிவிழிதத்துதழுறுக்கத்
திரங்கரனுடன்றுதிருகுஞ்சினமேரடார்ப்ப
வரங்கடிதுகுத்தினெருங்குடல்பதைப்ப.

உரை — அங்ஙனமொருவற்கொருவன் மனதிலழுந்தும்படி மிகநிந்தையைச்சொல்லிவைதலிற் கடற்றிரைபோலப்

பொங்கிக் கண்வழியாகவழலைவீசத் திரிசிரன்வந்து சீறிய
வெகுளியோடார்த்துச் சத்துருனை மார்பிலே யுடலெலாம்ப
தைக்கும்படி குத்தினனென்க (௪௯)

பதைத்தவுடல்பத்திருகளைக்குழுவுயர்டாய்ந்தான்
றுதைத்தவரிமேகர்பபவெதிர்துள்ளியிருகாலா
லுதைத்தனனுதைப்பவுருமொப்பவவனூர்த்துப்
புதைத்தனவெயிற்றிரியபுண்புனல்கடித்தான்

உரை — அப்பொழுது சத்துருன் உடல்பதைக்கும்படி குத்தப்பட்டுத் தானிருபத்தை யுயரப்பாய்ந்து மொய்த்தசிங்கத்தினுங் கொடிதாய்த் துள்ளியெதிர்வந் திருகாலாற்றிரிசிரனையுதைத்தான், உதைத்தவளவிலே யிடியேறுபோல முழங்கிச்சத்துருனுடைய புதைத்தன்பல்லின்வரிசை யிரத்தப்புனலொழும்படி யவனைக்கடித்தானென்க (௫௰)

கடித்தவுடல்செந்நீர்மாரிநிறைகால
விடித்தவிருகாலெனவெதிர்த்திருவர்தம்மைத்
துடித்தெழவுடற்றுவடமூற்றுமலிறுக்கப்
பிடித்தனர்கடித்தனர்விழுந்தனர்பிரண்டார்.

உரை — அங்ஙனங் கடிபட்டசத்துருனுடைய இரத்தமாரியைப்பெய்பார்த்த விருவரு மிடித்தவிருமேகங்களைப்போல முழங்கி யெதிர்த்துத் தாமிருவருங் குதித்தாற்போல மேற்குதித்தெழுவரு சேர்த்துச் சூழப்பற்றியவுந் தம்மையிறுகப்பிடித்துக்கடித்துக் கீழேவிழுந்தனர் பிரண்டாரென்க (௫௧)

பிரண்டனர்சுழன்றனர் பிரிந்திலர்பிரிந்தார்
திரண்டனர்திரிந்தனர் சிதைந்திலர்செறிந்தார்
மிரண்டிலர்வெதிர்ந்திலர் மெலிந்திலர்முனைந்தா
ரிரண்டாவெவ்விசும்புமென மீண்டெழுந்தார்.

உரை — அங்ஙனமிருவரும் விழுந்தவிடத்துப் பிரண்டு சுழன்று ஒருவனொருவனை விட்டுப்பிரியாமலுஞ் சிதையாமல் பொழுதுபிரிந்தும் பின்பு திரண்டுகூடித்திரிந்து சேர்ந்து மிரண்டு நெருங்கியஞ்சாமலுங் கலங்காமலு மெலியாமலு

நெருப்பினைக்கொண்ட விருமேகங்களைப்போலவெழுந்து மீளவுமெதிர்த்துபொருதாரென்க. (௫௨)

எழுந்திருவர்வவ்விய மருப்பிணைகைவிள்ள
வழுந்திருவடிக்கொடு வகுத்திடையுறதப்பக்
கழுந்திருகொம்பிருவர் கையொடுடெயர்ந்தே
விழுந்திருவர்வீழ்ந்தனருள் ளெள்கினர்வெருண்டார்.

உரை — அங்ஙன மெழுந்தபின்ன ரொருவற்கொருவனிருகொம்புகளைச் சிக்கெனப்பிடித்துக் கைவிடா தொருவற்கொருவ னிருகாலூழ்ந்தும்படிகுதித்து மார்பினையுதைப்பத் திருக்கநெருங்கிய வவன்கொம்புகளிவன்கையிலே யிவனவன்கொம்புகளவன்கையிலேயெயர்ந்துசிடக்க விருவரும் விழுந்து வெட்கிமுழங்கிக் கோபியாநின்றாரென்க. (௫௩)

வேறு.

நக்கனகண்டபேய்கள் நக்கனவென்றுவேந்தன்
மிக்கனசினத்துநோக்கி வியோதகம்போர்கையாளிக்கத்
தொக்கனபின்ங்களாஞ்சத் தூரணையிலவிடுபோலார்த்துத்
தக்கனவினைகள்கக்கச சத்தருசனைகொண்டாருல

உரை — அவ்விருபேய்கள் கொம்புகளிழந்த பூவே கண்டமற்றப்பசாசுகள மிகவுநக்கன, பேயகசாசமீருவயனிற் றுன்டயிதழியாற் றுணகமாட்டாமலு நகைமறுபபேய்களை மிகக்கோபத்துடனோக்கயப்பருவருள்விளைந்தபோரையும் டையாளியுத்தினை, அப்பொழு தங்கே திரண்டிருந்தபசாசுகளெல்லா மஞ்சயபடி மட்டின்றியிடித்த விடிகளைப்போலமுழங்கி மனதிரங்கொண்ட வினைகளைக்கக்கும்படி சத்தருசெஞ்ஞுங்பேய் மீளவுமுறைகளைக்கொண்டனவென்க. (௫௪)

வெலத்தொழிலெஞ்சவஞ்சி விதனையினிளைத்தேனெ
குலத்தொழில்வஞ்சம்பொங்கக் கூவிடத்தவனுஞ்செய்த

வலக்கொடியிருவர்சூழ வலியனுமொன்றினெண்ணச்
சலத்தொழிலரசன்மாற் றந்தானிண்டவன்சொன்னனே

உரை — வெற்றியில்லாதகொடி நானென்றுசி யொருகைகம்பெ ன்னிணு மிணைத்துப் பொலேனென [illegible] திரங்கசரன்சொன் னான். இப்பொழுதவனுநானும்பேய்க்குலத்துகுரிய வஞ்ச மிருதியாற் பூவுலகிடக்கும் [illegible] வல்லமையினொழுக்க மிருவருஞ்சொலவிக்காட்ட [illegible] வல்லமை யொன்று நீ ங்கள்சொல்லியொன்று [illegible] மே பொ ய்வியாலிக்குமமேயிக்க [illegible] போலப் புன்ன கைகாட்டலி [illegible] . (௫௫)

காசலாங்கூடலி [illegible] ரூலாம [illegible] யும்கூழ்ந்து
சேகலாருசிநதிறந [illegible]
டாசலாயத [illegible] லத்தைசனை [illegible] ருயயத்து
மாசலாநம்பயாக [illegible] புனைகருமகொணடேன்

உரை — சொ [illegible] செய்கவலத் தொழுமக் காட்டத்து [illegible] டெகட லொருபாது மேகம [illegible] ருகய பொன்ன [illegible] நின் [illegible] க்கவில்லாகத் தும, நாம்கூடுவ [illegible] னைமாகிய [illegible] வருந [illegible] யிருளாகியமயக்கத் [illegible] டையாசந்தைறதம்தசமாகச்செய் [illegible] [illegible] செய்த [illegible] . (௫௬)

ஏறிபதேயமொன்னிலு வென்னுவரீசங்குவாரும்
போர்பதேயரொப்பய புரிகுமாபுகர்கொள் மாரு
மாதரியமேயர்காகை யறைநவர்வளகுவாருந்
சாதறயம்யா [illegible] டை தகவுமாரிதமைக்கொவாரும்

உரை — நானமேவணங்கச்செய்கதேயனை யென்ன வேனை [illegible] ணையாசயுளடங்காமையிற் கணக்கமொல் லாருங்கள [illegible] வனாய [illegible] தயவொப்ப நடத்தவமொல்லா ரும் பாவிகளாகவு மத்தேயர்செய்தவற்றைச்சொல்லவேண்

டின் சொல்லுவரெல்லாருநாணவு மளவு மவர்வணங்கியதே வாக்குள்ள குணத்தின்றகைமைத் தவருக்குள்ளே நடப்பாரைக்கண்டா லவரைக்கொல்லவரு, செய்வரென்க (ஆகையான் மனிசரிடத்துப் பொறுக்கப்படாத குற்றங்களையுடையவரைத் தேவராகவணங்கச்செய்த வருமையைக்காட்டுவது கருத்து) (௫௭)

புனிதிலாவனியில்லாளைப் போக்கலாலரந்திமாழ்கல்
மனைவியாவெடுபட்டோ லிமனைவினயக்கவெயிறாறுக
லனையன்கவல்விளிற்றுச்செருந்ரசிவனருசிறக்கு [ன்
வினைவயலாம்பூசம்தவரீக் கயமுமோர்வியாபாடெடிற

உரை — பிரவுமறிய தூர்மனையாளைப் போக்கியகனு மெதுவியபியயகதுத்த மனைவிகையை லவடிபட்டோடு மியபாளைகனமு மதிரமக்கயமையாகு ரகசசெசந்நீ ராயணியாகப் தாழ்ப்பி ருமெ பிறை மையாயக ச்செய்வி மறைபருத்த தோகங்கறறவினைபட்ட கொளைவறவைக (௫௮)

பொருமறைமைதோடல் புறமாறைறாவிதன்னை மதுமாறமைடபுக்கும தசகாரளை வெப்பாறமல் வியமாமதநீர ருசவகறரவொர்க்குநாணை விகுமுறமைறயிருடயிரறயவாகக வெயரமேறன்

உரை — பிராபுமவி மொதளைத்தேகூச்சொலும் புறகாரயகளைவிருமயகமு மகமை ககமைகளிட்டயம்புமா ளைவைபுத்க காமவெடபினையாறியயப உ கமமதுமரு ட்புநகமைபகைவாக வம்மற பமைமயமபோவனகவி கவ முத்தகுசை முதுதகற்கொர்சுத ளைவு மியவெய லாம தேயதமாகநாட்டிம் தேவர்க்கேறம வியலவியனமேற வென்க. (௫௯)

குய்யமேவிரியாய்த்தாங்கல் ருய்பத்துவிளைவித்தல்கோ
கைடம்வைபுழுக்குவிழுதல் மருவிபதுவயாரணம்பிய [சம்
வையமேயாகப்பூணல் காட்டரும்பலவுநாட்டி
யையமேயின்றித்தேவர்க் கானந்தார்முறைமையென்றேன்

உரை — மீளவுங் கண்ணுதவுடலெல்லாங்குப்பமாய்த்தோன்றவு மொருவன்வைத்திட்டியதனாற் கோசமழிந்துவீழ்ந்து மிருகுமிகள்புணர்ச்சியிற்றிரண்டுசேர்த்தித் தேவணியாக வணிதலு மித்தன்மையினுங் காட்டற்கரியபலவற்றையுநாட்டியவையெலா மையமொய்நின்றித் தேவர்க்குரியமுறைமையென்றேனென்க (௬௧)

ஏமஞ்சேர்மாலையாக விழிபடக்கழுத்தசேர்ந்தோன்
காமஞ்சேர்சங்கத்தொன்றிற் கடந்தவா யிரமாண்டிள்ளோ
னேமஞ்சேர்மனைபாவொண்ணீ ராயிரமிழிமகொண்டோன்
சேமஞ்சேர்வலியிலோங்குஞ் சிறப்பெழுந்தவனென்றேன்.

அிணையேமனைவியாக வமைந்தவன்றேவனென்றேன்
பின்னைமேபசுதையைப்புல்லப் பெட்டவா றேவனென்றேன்
றன்னையேபழிக்குக்காமந் தணித்தவன்றேவனென்றே
னென்னையேயறைமேவனென்ற யாவுமேவழுவகச்செய்தேன்.

இவ்விரண்டொருதொடர்.

உரை — மீளவுஞ் சுடுகாட்டில்விழுந்தமாலைபோல விகழ்ச்சிபடும்படி கழுத்தமேபாடுசேர்ந்தவனு மொருகாமச்சங்கத்திலாயிரம்வருடங்கடந்தவனும் பதினாயிரம்பெண்டாட்டிகளைகொண்டவனும் வல்லமையிற்பொலிந்த தேவனென்றேன் மீளவுந் தன்றாயைமனைவியாகவைத்திருந்தவனுந் தன்னிளமகளோடு புணருமபடிவிரும்பி யவளைத் தொடர்ந்தவனுங் காமம்பொறுக்கமாட்டாமற் றன்னைத்தா னழித்தவனுந் தேவனென்றேன் மீளவுஞ் சொன்னவெல்லாமெய்யசொல்வேன் சொன்னயாவும்வழங்கவுஞ்செய்தேனென்க (௬௨)

உடல்விளையினமாக்க ளுணர்கவுநாளுங்காதை [னக்
மிடல்விளைகளிப்பிற்செய்தோர் விண்ணின்வாழ்தேவரான்
கடல்விளையரவத்தன்றோர் களிவிழாவணிகொண்டாட
வடலவிளைவஞ்சத்தங்க ணருமுறைநாட்டினேனே

உரை — அங்ஙனங் கொண்டவுடலினு லினத்தையுடைய மனிதர் நினைப்பதற்குமுதலாய்நாளும்படி யருவருப்புள்ள

வடத்தங்களைக் கொழுப்பின் களிப்போடு செய்தவரை வான்
வாழ்தேவரொன் றெண்ணி யம்மனிதர்தாமே கடலொலியொ
த்த வாரவாரத் தக்கதைபற்றித் திருப்பூழாவுகளைக்கொண்டாடு
ம்படி வல்லமையுள்ள வஞ்சகதானனே யெங்குமுறைமை
நாட்டினேனென்க (௬௩)

செண்முகம்புகைக்குங்கோயிற் றீட்டியதேவர்காதை
வாண்முகப்புகைக்கு நின்னைகண் மடற்றையர்கடகாலை
நாண்முகப்புகைத்தவறைநாணமற்றதுச்செய்தோனைப்
பூண்முகப்புதைத்தமையற பொலிவெய்யடணவகச்செய்தே
ன்.

உரை — நீளவும் வான்முகத்திற்புகைக்கு கோயில்களிடத்
துச் சித்திரமாகவெழுதப்பட்ட யத்தியவருடையகதைகளை
வாளுற்புகைக நின்னைடகண்ணையுடைய குலத்துமாதர்கள்க
ண்டால் வெட்கிப்போய்க்கையா லேனினத்முகத்தைக்கட்டு
கைத்து மூடினாராபு நாய்காணைபற்று நாணுவகாரிபங்
களொட்டியினிச்செய்யவனத் தேவனென்றெண்ணியவற்
றின்மேற்போட்ட வாபரணங்கள் செய்பு மபக்கயிருதியாற்
கைவெபத் தவனாவணங்கச்செய்தேனென்க (௬௪)

என்வலத்தொழிலைய வியன்றுவெக்கமைக்குபாயுத்
தன்வலத்தொழில் வலம்றுக் காவருனவலியோ யென்னுறம்
புன்வலத்தொழிலோவென்ன பொருங்கலிற்குன்றுந்
தோயறி [ன்.
மன்வலத்தொழில் லானுன்றுல் வரிசைபெற்றுய்வாயென்று

உரை — அவ்வனதானென்வல்லமையினாற் செய்ததொ
ழிலாலையா, இவனுமத்து கபாறச்செய்யயானவயுஞ்
சொன்னால் வலியோவென்றும் வலியில்லாதவனென்று மெ
திரிலேதமேனகோனமை, இருவருள் வலியோனுன்றால் வரி
சைபெறச்செய்க்கடவாயென்றா சத்தருச்செய்ய (௬௫)

கூடுடைமாக்கள்காமங் குணமெனநாடிநாடு
கேடுடைகாமமூழ்க் கெழுமியதேவர்காமப்

பிடையாதொன்றுன்னல் பெரும்புகழ்பெற்றவாண்மை[ன்.
யிடைதொழிலென்பாயோவெனத்திரங்கரன்மூற்பாய்ந்தா

உரை — சத்தனு சிலவெல்லாவற்றையுஞ் சொன்னதற்
கெதிர்மொழி திரங்கரன் சொல்வான் : கொண்டசரீரத்தின்ற
ன்மையான் மிசயுங்காமத்தைக் குணமென்றுமனிதர்விரும்பி
னதனுற் றும்விரும்பினை கேளிளகாம நிற்றையென்றுமே்தா
ன்றும லமைமூற்றும்படி தேவருங்காமத்தமிழ்ந்திப் பெரு
மைகொண்டாரென் றம்மனிதர்நினைக்கும்படிசெய்வதுபெ
ரும்புகழ்பெற்ற வல்லமையின் றொழிலென்பாயோ வென்
றதானுந் தனவல்லமைகாட்டும்படி முன்னேபாய்ந்தான்
திரங்கரனென்க (௬௬)

மூகிற்கிழித்திடித்தவேற்றின் முகத்தழற்கதத்தவேகத்
துகிர்கழிக்கனிச்சிகாட்டியுற்றவச்சவத்தைதப்பாத்தட்
டுசறகிழிக்குனுக்குவேந்தன் சுளித்ததிர்த்ததட்டிப்பாய்ந்த
சிகிக்கிறித்தடக்கண் றுன் செப்பலும்விலக்கினுனே.

உரை — அவ்வன மேகத்தைக்கிழித்திடித்துவிழுகிடிபோ
ல முகத்தழல்புறப்படக் காய்ந்தம்கோபத்துடனே கிறுமச்சி
ற்று யனைக்குடாரிபோல்வளாந்த நகங்களைக்காட்டி முன்
னேபாய்ந்து வந்த பேயாகிய திரங்கரனைப்பாம்பின சொடி
யையேந்திய பேய்க்கரசன்கண்டு கோபித்ததட்டி யக்கனி
ப்படமாகச் சிவந்ததடக்கண்ணுனாகிய திரங்கரன்மறுமொ
ழிசொல்லாதபடி விலக்கினுனென்க (௬௭)

ற்றைநிசெய்தபோதேயெமதுபேரினத்துக்கோனுங்
மற்றைநிதவனுகி வாழிசத்தனுசேவஞ்சத் [னை
சொற்றைநிருடையநீயென் றெமலறகொம்பனிக்கேனெ
வறறைநீடல்யினுப்பணமைத்துநாட்டினன்பேய்மேந்தே

உரை — அங்ஙனந் திரங்கரன்பேசாதபடி யமர்த்
ன்பு பேய்க்கரசன் சத்தனுவைநோக்கி நீயிவையெல்லாவற்
றையுஞ்செய்தபோதே பேய்க்கெலாமரசனுனே, நீ தலைவனு
ய்வாழ்வாயாகச்சத்தனுசே, மீளவு நீ வஞ்சத்திலே நிகரின்றி

யொற்றையானையி லதற்கடையாளமாக வொற்றைக்கொம்
புணக்குத்தத்தே னென்றுசொல்லிப் போர்முகத்திரண்டுகொ
ம்புகளிறுத்த சத்துருக்கினன்றய்ந்நிலை யொருபெருங்கொம்
பினைவைத்து நாட்டினா ா பேய்க்கரசனென்க (௬௮)

எப்புறத்தினைத் தருமனெறிய றதன்கோலந்நாட்டிற்
கப்புறத்தியலாவென்று மைந்தர்களுத்துணர்த்த கடமை
செப்புறத்தனைகண்ட சிறப்பெனவரசன்கேட்பத்
தப்புறத்தவித்திடருச் சத்துருக்கனைசகுற்றான்

உரை.—மேவு முன்னெவிங்குஞ் செல்லாநின்ற தன்கோ
லிப்படி நரகம்கப்புறத்துச் செல்லாமைக்கு சத்துருக்கனை செ
ன்றானே, அரசனுஞ் சொல்லுபற் கவன் மனதிலெந்தினைத்த
காரணம்வாயாமையடி யவன்கண்டசேடமெமனே பே
ய்க்கரசன் கேட்டவளவிலே பாவமவினையுங்கொடி நீசரிலாத
சொடியவருசர்ரயுடையசத்துருக்கன மறுமொழிசொல்லத்து
டங்குநென்க (௬௯)

வேறு.

வானவர்க்கிளைவாழ்விழந்தியக்கண் டிமருண்டெரிநாம்விழுங்
காலுந்
தேன்விளைசாலமுறைமை மறையோ ரதுறநாஞ்செய்யுங்காவிய வன்
முறைவிளையாமையிலுக மை யொழிபபெண்வனைத்திறை
குன்விடையாருலகமேத்த ஞானிவுதனகும் பான்றுமையா

உரை.—சத்துருக் செப்பனத்தொன்றுனை னனில், வானு
லகுள்ள வாழ்வுகளையிழந்து மடங்கி நமகள் தேன் டங்கேந்தி
யறு நரகில்வழு போகத் தேவடவொழிந்த பூங்காவ
னக்கிருந்தவாநுமனிகள விலகிலனேயத்தின்று டாவத்தி
ல்விழுமையடு நாளுசெய்யபோது நானடாத்தினியன்க்
கு மனுவுடலி ளிவருமகளைக்கெடுப்பேனென்று நமக்கான்
டவன் சொன்னனலேலோ? அங்ஙன மவருலயாத்தகுந்தன்
டக்காலம்வந்ததெனறு தோன்றுமையாவென்க (௭௰)

ஏழொழுவெண்டிங்களுமுன் னிருதண்டிங்களுமுன
போரொழுவெப்பகைசெய்த பொருந்தலரைக்காணுதாம்

காடொழுவெங்கரத்திடிபோற் கடிதிங்கண்வீழ்ந்தடைந்த
சூடொழுவெங்காரணமுந் தோன்றிலதுட்குற்றனமே.

உரை — ஆண்டவனவதரித்ததுசித்தாவென்பதற்குக் கார ணங்காட்டத்துணிகின்றார் ஆகையிற் பதினாலுமாசமுன்னு நாலுமாசமுமென்று நம்மைப்போர்செய்து பகைத்தவரைக் காலுமனமேமேதுந்தடுவின்றாவிழுந்த விடிகளைப்போலத் துணு க்கெனநரகில் முந்துவந்தது மடுத் தொருகாரணமுந்தோ ன்றுமலந்தவுடற்றோமல்லோமாக (பதினாலுமாசமு ம்பேனை நீடுவயாரமு நாலுமாசமுன்னே திருக்குமாரன் பிறந்ததுமாதமுன்சொன்னபடி மயிருகாலத்தும் பூவுல கிருதம்பெபெலா நரகவீழ்ந்தனவெனக) (எக)

மீண்டெழுந்துநாலுமதிமுன் மேதினியிற்போயங்க
மாடெழுமய நக்தவமதச்சாப்தமிய நிரவி [ன்
மீண்டெழுந்துமயமடைவகா யிலங்குதிசியிருகமிவி [ம்
யாண்டெழுநயவயமலா மறுதயக்கேகழ்ந்ததுகண்டோ

உரை — நாலுமாசமுன்னே யங்ஙனநரகல்வீழ்ந்தவுட னே நிறையவுடனெழுந்து பூவலந்தப்போ யங்கேசமைட்சிமொரு த்தியுதித்தாளெனமோகப பார்த்துவிடக்கேயன்று சூரியனு தயமுக்குமுதியமுந்து மூலக்கேனேயொளிபைப்பரப்பி யமிரா கயமுமநாவு பூமாலைகலொமெபொலிவெய்தி யமுகுமடற்பியிமக்கணேமடாயவமேலா வெக (எஉ)

தேவெயிர்மார்புக்கவெழுந்தோசாலெபருவமில
காணிவயிறாசடாமைபுங்கவநதுப கூனியபெய்தி
வானாயிறசொமயமரமையமறுவெசய்குறுமசனே
டைவயிருருவெகபப்யதிளியனயழகவொமேடாம்.

உரை — மீளவுமதியுபருவமில்லாதாயினும் நிறை பொருமைகளையுமமூத்துமலரொகலுதக வாசயலித்தகணி களையுமகாயத்துப பலசோலைகள் மகழ்ந்தனபோலத்தோ ன்றி வானுலகடைந்து நிறையவோடிய வயிரதவெள்ள மன்று

பூவலகில்வந்து திண்டாற்போலவாகி வாலுலகொப்பப் பூ
வுலகெழுந்து மாட்சியிற்பொலியக்கண்டோமென்க (௭௩)

அருள்காட்டிப்பவதரித்தா ரூண்டகையோவவ்வறென்
றேத
தெருள்காட்டிப்பெத்திலத்தோர் திறவலுநித்தனெனன்றே
னிருள்காட்டுமல்கிரவி லொளிக்கெய்தானிறையெதிர்
வெருள்காட்டிமீண்டிவைபாய்த் தமமகனிவாவேதரென்
றன்

உரை — அவ்வெவெலாமாகையி லென்று தவையப்புரிந்து நாதனவதரித்ததற்காமென வைராகேர், அவ்வ பெயரில. மாதாவிடத்துத் தெளிந்தவொளம்பா டோருபிள்ளைபிறக்கவென்றோம், அதற்குதிராணைவலிருகவிரதவிலேயொளித்துவாரமல்லவ்ர மீனயுநாம்வேநதும்பா யிப்பொழுதுவகைவத்தையாராய்ந்தால் தூவெபச்சலிட்டுப் பிறகவள்ளை யவதரித்தநாதன்றவனன்று மேலோனாமென்றான் சத்துருவெசனக (௭௪)

நாய்முகத்துநின்றனைடேய் நவின்றனவகேட்டசெக்க
வீய்முகத்தவியப்பெய்தி விளம்பியத்திடமொழுனா [ள
நீய்முகத்துதலைகாட்டுஞ் சேயவுமறுத்தனைக்க [பாமே.
யெ நாய்முகத்தவிலக்குறையுளீர் ஞெமழுநிறையேயானிறப்

உரை. — அங்ஙன நாய்முகத்துருவாய்நின்ற சத்துருசு சொன்னவற்றைக்கேட்ட வசிட்டகுமா ருவெயித்தவங்ஙனகமுகத்தாலசையங்காட்டி யிவன்சொன்ன சத்தியமெனறன், சேய்வென்றுபேயேவவளிற் றிமுகத் துதலையைக்காட்டி யவனொசான்னைமயத்துச்சொலவன், நீசென்னடியனாறு மடிலதாளிடத்து பிறந்தபிள்ளையிருகப்பமாயிரத நிடமாயிய தானையிற்பிறந்ததே. அத்தன்மைத்தானேவவதரித்தபிறப்பாமோ வலவென்றானென்க (௭௫)

படிகொண்டானுனைத்தழைப்பல் வினைகொண்டானிற்
றைதயோமும் [ட
படிகொண்டான்பகைகொண்டான் பகர்வரியவருர்கொண்

குடிகொண்டான்புறநாட்டிற் கூரிடுக்கண்கொண்டானே
முடிகொண்டாய்மூவுலகோர் மூவிரலாற்கொண்டானே

உரை — அங்ஙனம் பெத்திலமென்னுமூரிலேபிறந்தபின் னே தரித்திரத்தைக்கொண்டான், தொத்தமும்படி பலவினைக ளைக்கொண்டான், இகழ்ச்சியோடு பூமியிலுதித்தான், உட னேதன்னைப்பகைத்தவரைக்கொண்டான், சொல்லப்படாத துன்பங்களைக்கொண்டவரிடத்திற் பிறந்தான், தன்குடிமுந் து புறநாட்டிற்போயலைந் தரியதுயரங்களை மிகுதியாய்க்கொ ண்டான், இத்தன்மைத்தானே முடியைச்சூழ்ந்து மூவுல கங்களை மூவிரலாற்றாங்காநிற்குமாட்டவனென்ப தலைவ னென்றவாறு (மூவிரல்களாவன: திற நீதி ஞானமென்க) (௩௬)

என்றுரைத்திசைத்திசைப்ப வெரிப்பலபேய்பேய்

கன்றுநர்கன்னிவயிற் கடவுளுலகுதிப்பனெனக்
குன்றுமைப்சுருதிபதாய்க கொழுதனுளமரியெனப்பா
னன்றுவநகின்றமக ளுண்டகையோவன்றறைந்தான்.

உரை — சீராய் வங்ஙனஞ்சொன்னவளவில் லகற்சொத் தகாய்ப் பலவர்களையும் பலபேய்கள்சொன்னபின்பு பேய்ப் பிசாசசெசால்வான்: குலபூபதிகன்னிமாறுமலைருக்கிவ யிற்றிற் கடவுளவதரிக்கப்பிறப்பானென்று தப்பாதவேதத் தீடசொல்லியிருக்கவயிற் பருடனையுள்ள மரியென்பவள் ச த்தலுகசொல்லபடி. யன்றுமைபதியிடதரிடதிற்றபிள்ளை யாலுடனென்னவலமேமோ வலைவலைவந்துறைக. (௩௭)

கலைபுறங்கண்டொளிர்ஞானங் கடந்திறையோன்கன்னி த்தாய்க்
கிலைபுறங்கண்டவருயர்த்தோன் கணவனெனவிந்தனகாற்
கொலைபுறங்கண்டிகற்குணுங்கற் கிலைவொளிப்பக்குணித்த னமே
நிலைபுறங்கண்டாமடைகமூர் னிலைத்துபயனின்றுளதால்.

உரை. — அங்ஙன மாகையிற் படித்த நூல்களைக் கொண்டொளிரு ஞானத்தைக்கடந்த வறிவுடையநாதன் றன்னைப் புருடனுதவியின்றிக் கன்னியழியாமலீன்றதாய்க்கு மலர்ந்த பூங்கொடியையேந்திய சூசையை மணத்துணைவனாக்கத்தந்த போது தானவதரித்தசெய்தியைக் கொல்லும்பகையுள்ளபசாசுக்கொளிக்கும்படி நினைத்தம்மணத்தைமுடித்தானல்லவோ? அன்றநாத னிலைக்கும்படி நினைத்தபய னின்றுகண்டதென்க (மரியென்பவள் புருடனுள்ளவளாகையிற் கன்னியல்லவென்று பசாசெண்ணியாகையாலவளீன்றபிள்ளையு நாதனல்லவென்று நிச்சயித்தமையா லாண்டவனினைத்தபயன்கண்டதென்றென்க.) (௭௮)

தேற்றுதோ ரரும்பொருளை யிருட்டறையுட்டேடுவார்
லாற்றுகோர்மந்திரத்தி னலகையினறிவகாறு [போ
மாற்றுதோர்வெருட்கடலை நீந்தியாமருடலையப்
போற்றும்பார்துயர்விள்ளாப் புகைந்தரசன்புகலுற்றான்

உரை.—அங்ஙனந் தெளியாதா ரரியதோர்பொருளையிருண்டவறையினுட் டேடினாற்போலவன்றப்பேயவலா முடியா. வாலோசனையைச்செய்து நிலையுங்காணாமன் மாறைப் படாதவச்சக்கடலை நீந்தி - கடக்கமாட்டாமன் மயங்கியலையாநிற்பத் தன்றேசாத்து விலகப்படாததுன்பங் கதவிடாமற் புகைந்து சினத்தைக்காட்டுநின்றபேய்க்கரசன் சொன்னானென்க. (௭௯)

வேறு.

ஐயமீட்பதன் பொருட்டகச்சலைநினைவானின்
வையமீட்பதன பொருட்டெமால்மலிந்தனவருசப்
பொய்யமீட்பதன் பொருட்டிறைபிறந்திலனிவன
மெய்யமீட்பதன் பொருட்டொருவிளக்கமுமிலதால்

உரை. — பேய்க்கரசனெங்ஙனஞ்சொன்னானென்னில், ஆண்டவனவதரித் துலகிற்பிறந்தானே யில்லையோவென்னுஞ் சந்தேகத்தையுத்தரிப்ப வலைந்தபலநினைவுகளைவுங்கள், பூ

வுலகிரட்சித்து நம்மால்வளர்ந்த வஞ்சப்பொருந்திய பொ
ய்யைமீட்கும்படி நாதன்மனிதனாய்ப்பிறந்தவனல்ல, இந்த
மெய், இதைமறுக்கும்படி ஞாயமொன்றுமில்லை யென்று
மெனக (௮௰)

திடங்கொடார்புலன் றெளிந்தநாமறிகிலாமனுவாய்த்
தடங்கொடாண்டகை சரணிபிறப்பனேவிதுவே
மடங்கொடாயின வழுதெய்வநந்நோய்மறுப்ப
விடங்கொடாகுமதியாமெனவியடபுதிவென்றான்.

உரை — மீளவுந் தப்பாதவறிவின்றெளிவுடைப்பதா மறி
யாமலாண்டவனல்லமைகொண்டு மனிதனாய்ப்பூவுலகிற்பி
றப்பானேயில்லை, இதுவறியாதார்சொல்லும பொய்யென்
றுநிச்சயித்து நமதுவாக்கு பத்தைத்தீர்க்கும்படி யிடம்
பொருந்திசசெய்யு முபாயமேதென்று சொல்லுவீராகவெ
ன்றான்பேய்க்கரசனெனக. (௮௧)

இரகமாயிரு மருப்பிடையைத்துயர்செருத்த
வுரகமாடிய வருகொடிமேழமுழுமத்தா
னரகமாநிர நயப்புறவிரகநோய்நலசும்
விரகவாயுவு வெடிப்பநக்கிமபுகல்கொண்டான்

உரை — பேய்க்கரசன்சொன்னதைக்கேட்டுத் தன்னிரு
கொம்புகளினடுவேயிலைசிராவொப்பப் படத்தைவிரித்துச்
சினந்தாடாநின்ற பாம்பினுருவத்தைவைத்துக்கொண்டு செ
ம்மறிக்கடாயின் முகத்துநிறவனாய் நரகத்திற்குநாயகரும்
விரகநோய்விளைவிக்குங்குணத்தவனாய் விரகவாயுவென்னும்
பேய் மிகவும்வெடிப்பச்சிரித்துச் சொல்லத்துடங்கினனெ
னக. (௮௨)

தாமதாடிய வுருவமொண்கோயிலிந்துகளாய்ச்
சேமநாடெனச் செழுமெசித்திழத்தனசிதைவால்
வீமநாடிய வெருக்கொடுமையங்குவதென்றே
காமநாடிய காலரிதெமக்குளதுண்டோ.

உரை. — வசித்திடத்தருச்சனையாகப் பூம்புகைசூழ்ந்த வெமதுருவங்களு மொளிர்ந்தபொற்கோயில்களுந் தகர்ந்து தூளாகி யெங்காவலாய்நின்றவந்நாட்டை நாமிழந்துவந்த துயர்களா லஞ்சிவெருவி மயங்குவானேன்? காமமென்றேவ மூழ்கச்செய்தா னமக்கரியதொன்றுண்டோ வில்லையென்க. (௮௩)

சிலைவல்லார்களுஞ் சிறப்பெழுநெடும்புகழ்நினை நூற்
கலைவல்லார்களுங் கடிநிதித்திருக்கொடுபெருங்கோ
னிலைவல்லார்களு நிறுவியமற்றவல்லாரு
முலைவல்லார்களின் முயலினுன்முரிவிலாருண்டோ

உரை. — காமத்திற்றிறத்தா லாகாததில்லை யென்பதற்குப் போர்முகத்தஞ்சாதவீரத்து விற்வினைவல்லவருஞ் சிறப்பிற் பொலிந்து நெடியபுகழையுள்ள நிறைந்த கல்வியின்வல்லவரு நிதிப்பெருஞ்செல்வத்துயர்ந்த கோலோச்சி யாண்டபூமியில்வல்லவருமா பொலிந்த மற்றயாவரும் காமத்தமிழ்ந்தினகாலத் தவருட்கெடாதவருண்டோ வில்லையென்க. (௮௪)

காரிழந்திழி துளியெனநாடொறுங்கனலிற்
பாரிழந்திழி பல்லுயிரியாவையும்பார்க்கி
னீரிழந்திழி நிறைதவிர்காமதரல்லாற்
சீரிழந்திழி செயிருறெண்ணுவதரிதோ

உரை — மேகத்தினின்று பொழியுந் துளிகளைப்போல நாடோறு மட்டின்றிப் பூவுலகினின்று நிரகவிழும் பலமனிதருயிர்களைப்பார்க்குமிடத்தில் நிறைதவிர்ந்த காமத்தமிழ்ந்தியபாவிகளல்லாதே மற்றக்குற்றங்களால்விழுமனிதர் கொஞ்சமாகையி லெண்ணுவதரிதல்லவென்க (௮௫)

என்னியம்புவ னியானினியிவணொலாமொருங்கு
முன்னியம்பிய முரட்டொழிலியாவையுநோக்கற்
கொன்னியம்பினர் காமநாட்டினனெனக்கூறப்
பின்னியம்பிடப் பிழைசெயுந்தொழிலியாதுண்டோ.

உரை. — காமத்தால்வருங்கேடுகளைக்காட்டும்படி நானினி விரித்துச்சொல்லுவானேன்? முன்பேசின மற்றப்பேய்க

ளெல்லாம் வீறுய்விரித்துக்காட்டின தம்வலத்தொழிலை யாராய்ந்துவிடத்துக்காமத்தைநாட்டிவழங்கச்செய்தோமென்றொருமொழியா லெல்லாவற்றையுமடக்கிப் பின்பு பாவத்தைவிளைவிக்கும்வேறொருதொழிலையுஞ் சொல்லவேண்டுமோவில்லையென்க (௮௬)

வேட்டதோர்வினை விலக்கினர்மானிடராயின்
மீட்டதோர்வினை விழைந்துலகழிக்கும்பற்றொழிலைக்
கேட்டதோர்வினை கிடைத்திடப்படனிலாவாசை
கோட்டதோர்வினை குனிப்பநாங்கொற்றமாமென்றான்.

உரை.— இவையெலா மங்கனமாகையின் மனிதர்காமத்தாசையைவெறுத்தாராயின் மீளவும் பூவுலகினைக்கெடுக்கும்படி யேற்றதொழிலாவதென்றும்கேட்பதுவீண்டானே, காமத்தினமேலாசையொன்றே நிறைதவிர்த்து வளையும்படி யுபாயநினைத்து நாஞ்செய்தால் வெற்றியாகுமென்றான விரகவாயுவென்க. (௮௭)

பொய்யெஞ்சாவுரை வியந்துகேட்டலகைகளார்ப்ப
மையெஞ்சாவரையினைதழுவியவண்ணம்
பொய்யெஞ்சாவிறை புகாவறபொறைப்புயத்தழுவி
மொய்யெஞ்சாநிறை வஞ்சகமுயல்வினைமொழிந்தான்.

உரை —விரகவாயுவுசொன்ன தப்பில்லாதவுரைகளை யதிசயப்படக் கேட்ட மற்றப்பேய்கள்முழங்காநிற்ப மேகங்கள் விடாதுதவழுமுயர்ந்தமலை மற்றொருமலையைத்தழுவினாற்போலக் குறையாதபொய்வல்ல பேய்க்கரசனையெலாவற்றையுஞ்சொன்ன விரகவாயுவின் மலையொத்தபுயங்களைக்கட்டிக்கொண்டு போர்முகத்துக்குறையாதவஞ்சனைக்கேற்ற சிறிதுமுயற்சிகளைச்சொல்லத்துடங்கினனென்க (௮௮)

தாங்கரும்பொறை தறிமடுத்தெடுத்தெனவஞ்சத்
தேங்கருந்தொழி லுதவிகொண்டொளித்தவேலெறிந்த
நீங்கரும்பகை நிறையுயிருண்டெனநீயுந்
தீங்கரும்படை யொளித்தியேற்செயிர்புகவெல்வாய்.

உரை.—விரகவாயுவுக்குப் பேய்க்கரசன் வஞ்சனைக்குரி யவுருவினை யெங்ஙனஞ்சொன்னானென்னில், தாங்கப்ப டாதபாரத்தைத் தடிகளைக்கட்டாய்ப்போட்டுப்பாரைப் போல நீயும்வெல்லும்படி யரியவஞ்சகத்தொழில்களை புரி ... வாய். மீளவுங் காட்டாம லொளித்தெறிந்த வேலைமாற்றான்காத்துவிலக்கமாட்டாமற் றப்பாதவாறுபி ணையுண்பதுபோல நீயும்பாவமென்றதோன்றுதபடி பாவ மென்னு மாயுதத்தையொளித்தாயாகிற் பாவமேகினைத்து செய்மேவென்வாயென்க. (அ௬)

வெல்வதற்கரும் குணத்துளத்திறையவன்புதைத்த வெல்வதற்கரு நாணமதொன்றினைவென்று வெல்வதற்கரு முளமுனக்கமைந்துபாமுகத்திற் செல்வதற்கருந் தொடையெனத்துடர்வனதுகளே.

உரை.—அழிப்பதற்கரியதன்மைத் தாண்டவன் மனிதர் மனதிற்புதைத்துவைத்த வெல்லும்படி யரியநாணமென் றினை வென்றுயாகிற் பொருந்தியிணங்காதமனமுமுனக் கணங்கிச் சகலபாவங்களும் பாமுகத்திற் றொடைகளைப்போ லத்துடர்ந்துவரவுங் காண்பாயென்க. (௧௰)

நங்கைநம்பியு நாடியவன்பெனநாட்டிச் சங்கையம்பல சாதிதன்முறையெனப்புகுத்தி யங்கையாங்கனே பழகினியகலினுமகிதன் வங்கையின்புற வஞ்னிமுந்தையெனவழல்வாள்

உரை —சொன்னநாணத்தை வெல்வதற்குபாயமேதெ னில், தங்கைத்தியுமண்ணனும் பற்றிய வன்பென்னுகி யைநாட்டித் தம்முட்சங்கையென்னுஞ் சாதிமுறையென் னும் பலவிலையாட்டுகளைப்புகுத்தி யங்ஙனநாணமழியும்ப டி வெளியின்னைபழகினாகி னியகன்றபோளது முன்ப கைகளிகளும்படி திமுன்வைத்தவைக்கோல்போல வவள் காமத்தீயிலவேதவுங் காண்பாயென்க. (௧௧)

மால்கலந்தவா வனுரவென்பணியினுத்தவிருர்

சால்கலந்தபாச் சாற்றவுங்கேட்பவுஞ்செய்வாய்
பால்கலந்தகாற் பருகியநஞ்சுமீட்பரிதே.

உரை.— மீளவு நாணத்தைவெல்லும்படி மயக்குவிக்குந் தீயவாசைவளரும்பொருட்டு நானெனெஞ்சேவலினுற் கல்வி வல்லோ ரரிய நூற்படி வாய்மதுட்பொழிந்ததுபோல வினி தாய்ப்பாடிக் காமவிகரோய்மிகவுங்கலந்து சொன்னபாட் டுகளை மற்றவர்வாயாற்சொல்லவுங் காதாறக்கேட்பவுஞ்செய் வாய், பாலோடுகலந்த நஞ்சைக்குடித்தாற் றிரும்பாததும்பால வினியபாவோடு மனநிறைகொண்ட காமத்தாசையு மீளாதெ ன்க (௯௨)

ஒருவருஞ்செயி னுரைப்பவுங்கேட்பவுஞ்செய்தா
லிருவருஞ்செயி னறியுநாணமேவெல்வாய்
மருவரும்புகர் பழக்கவழங்கியமுறையாற்
றெருவரும்புலி சீறினுஞ்சிறுவருமவெருவார்.

உரை.— மீளவு மங்கங்கே யொருத்தனொருத்திசெய்தகு ற்றம் பலரே சொல்லவுங் கேட்டவுஞ்செய்தாயாகிற் பிறர்கு ற்றத்தைச்சொன்னவனும் பொருந்திக்கேட்டவனு மென்றி ருவர்செய்யுங் குற்றமுமல்லாதே மற்றவர்நாணமழியும்படி வெல்லுவாய், அதேனெனிற்கிட்டாதகுற்றமேகிட்டி யண் டையிற்பழகுற விவனவன்செய்ததை நானுஞ்செய்தாலெ ன்னவென்றதுபோல் வக்குற்றம்வழக்குமுறையாம், அதெங் ஙனமெனின் றெருவேதிரியுங்கொடும்புலி சீறினும் பழ க்கத்தினற் சிறுபிள்ளைகள்முதலா யஞ்சாரென்க (௯௩)

அஞ்சினுனொளி லமைகிரோர்முறையென்பாய்வஞ்சத்
தெஞ்சிலாமயனி லிணங்குவரிணங்கயபின்றை
நஞ்சிலாதவை நறுமையென் றுணர்ந்துநிற்பவரோ
மஞ்சுஃவாழுயர் வரைபெயர்ந்திழிந்தகல்போன்றே.

உரை.— இவையெலாமாகியும் பாவத்துக்கஞ்சினாகி லொருமுறைமாத்திரஞ்சம்மதிப்பீராகவென்பாய், இங்ஙனங் குறையாதவஞ்சத்தோடு பலநான்சொல்லிக்கொண்டு வருவா

யாகி லிணங்குவார், ஒருமுறையிணங்கினபின்பு செய்த வவ்
வொருபாவத்தால்வந்த கேடொன்றுங்காணுமையா னஞ்சி
ல்லாதபாவ மிசபமென்றெண்ணி மீளவும் பலபாவங்களில்
விழாமனிற்பாரோ வில்லையே அவைசங்கனமென்னின் மேக
த்துள்வாழுமுடர்ந்தமலையினுச்சியினின் பெடர்க்கரியபெ
ருங்கல்லு பெயர்ந்தபின்ன ரொருவனுலுந் தாங்கப்படாம
லுருண்டு விசைபோடுவிழுவதுபோல வவருமொருபாவத்
தினின் றொருபாவத்தி லுருண்டுவிழுவாரென்க. (கச)

நம்பியோடெழி னலமணத்துணைவியுந்தம்முள்
வெம்பியோர்பகை விளைந்தகாற்காமமுடலிலைவாத்
தும்பிசூழவர்த் தொற்கொழுகொம்பிழந்தமுத்த
கொம்பிலேறிய கொழுங்கொடிபோல்வதுகாண்பாய்

உரை.—மீளவும் புருடனு மழகியமணத்துணைவியு மன்
போடுசேராமற் றம்முட்கோபமும் பகையும்விளையச்செ
ய்வாய், செய்தாயாகிற் புறத்துக்காமநாடிப் பாவமும்விளையு
ம் அவ்வியவனமேனி வின்பமெய்து முன்வளர்சேணுடையம
லராப்பூத்தகனது பழைய கொழுகொம்பினையிழந்த பூங்
கொடி யன்னையிலுள்ள கொம்பின்மே லேறிப்படருந் த
ன்மைத்தாகக் காண்பாயென்க (கரு)

பெண்ணங்காணியும் பெருமையும்பேரொளிப்பிறப்
பின்னம்வாழ்க்கையுஞ் சிதையுமென்றிணங்கலராகில் [புத்
வண்ணத்திர் நளம் வளர்ந்துதிரசையுறச்செய்வாய்
தண்ணம்வேர்கெடிற் றருமெலருஞ்சாய்தலுமரிதோ

உரை — மீளவும் பெண்மைக் கழகியகாணியாகியகற்பு
ம் பெருமையும் பெருங்கீர்த்தியுள்ள குலத்தின்பிறப்பும் வ
ளியிற்பொலிந்த தம்வாழ்க்கையு மிவையெலாம்பாவத்தாற்
கெடுவனவென் றொருமுறையாயினும் பாவத்துக்கிணங்கா
ராகிற் குணமிழந்தமனமாகிலுங் கோணிப் பொருந்திப்
பூவத்தாசையைக்கொள்ளும்படி செய்வாய், செய்சாயாகி
லவர்பாவத்தை முடிக்கச்செய்வதுமெளியதாம், அதெங்ஙன

மென்னிற் குளிர்ந்தவேர் காய்ந்துகெட்டபின்பு மரமெலா
மொருங்குடன் றனேசாய்தலு மெனிதென்க (௩௬)

ஐம்முகத்திவை வருத்தருட்டழிகொலைகளவும்
பொய்முகத்தரும் புடைபலவினையுமா முணர்த்தி
நைமுகத்துயிர் நவையுநீக்கேசுரவைரசன்
மொய்முகத்தரு முரட்டொழுநெடிதுகாட்டினனே

உரை — அங்ஙனம் பேய்க்கரசன் மனிதனாமய ஜீவித்
தற்குரிய விஷமறைச்சொல்லி மீளவும் பழிகளுங் கொலைகளு
ங்களவுகளு மற்றப்பற்பலபாவங்கள் பொய்வழிப்பாசவினையுந
லமையுமுணர்த்தி மனிதருயிர்கள் தளர்ந்து குற்றங்களைக்
கொணடுகெடும்படி யரியபொருளொழுங்கை நெடிகாய்ச்
சொல்லிக்காட்டினனென்க (௩௭)

வேறு.

ஐந்துமுகப்புதைத்தநாகநீர் முகத்தார் கரோசரணைக்கு
லவசொல்லும [பொயாவு
பொய்முகம்புதைத்தவருஞ்சனந்தொழிலாற் புலையுறவுணர்ந்
மெய்முகம்புதைக்கநூலவிளக்கெய்த விளங்குமேனதயனி
லாதவன்று [கடமென்று
மைமுகம்புதைத்தபொய்யறக்காட்டல் வழிபடுகும்பெருந்

உரை — அங்ஙனம் பலவகைப்பாவங்கள் விளைவிக்கும்ப
டி யெடுத்தவாலோசனைகளைக்கேட்டுக் கையுள்ளதாசமாக்ய
யானைமுகத்தருமெடுத்துநிறை கரோசரணை றுமம்பயந
லைத்துச்சொல்லும்: சொன்னபொய்களாலொளித்த வருச
னைத்தொழிலைக்கொண்டு பாவவினையும்படி நன்னெறிவழிய
லா மெய்யபிடாதவேதநூல் விளக்காகக்கொண்டு மெவ்வயா
மாறுபாடு நில்லதாமல்லோ நானினைத்தவாலோசனைபோ
லவன்னிம பாவமறைக்கும்படி பொய்யாணபுண்ணியங்களை
ப்படிப்பித்தா லதுவே பாவங்கள் திரளாய்ப்புகும்பெரும்
பாதையாமென்று னென்க (௩௮)

நிறைதவிர்தீயகயவருநரகி னிடைதவிர்ந்தின்பவீடுடைவின்
சிறைதவிர்காலையெய்தலும்விழைவார் செல்கதியெளிதெனக்காட்டி
முறைதவிரறங்கணம்புளிதாமே மூழ்கிய துகளினுந்தஞ்சா
மறைதவிரறத்தால்வீடுறவுள்ளி மாய்த்தெரிநரகிடைவீழ்வார்.

உரை — பொய்யறங்காட்டல், பாவம்புகும்வழி யெங்ஙனமாமெனில், நீதிநிறைதவிர்ந்தோரூகும் பாவிகள்முதலாய் நரகத்தில்விழாம லின்பவாசவீட்டை யிறக்கும்பொழு தடைதலே விரும்புவாராகையிற் செல்கதியடைத லெளிதென்று பொய்வழியைக்காட்டினன், முறைதவிர்ந்தபொய்யானவறங்களை நம்பிப் பாவஞ்செய்தாலுங் கரையேறுவோமென்றெண்ணித் தாமேபாவத்தமிழ்ந்தி யஞ்சாமல்வேதவிதிதவிர்ந்த வறத்தினாலயத்தாற் றப்பாமல் வான்வீட்டைச்சேருவோமென்றெண்ணிச் செத்துநரகிலென்றுமெரிக்கும் வேகும்படிவிழுவாரென்க (௯௯)

நீர்விளைசிறந்தபற்றுறைமூழ்க லீர்த்துளியிறைத் துயர்வாரல்
பேர்விளையோதல்பெருமணிதரித்தல் பெருஞ்சடைநீடுறவளார்த்தல்
சூர்விளையழலேலகொன்றநீறணிதல் துஞ்சினோர்கெள்ளமுதிறைத்த
லோர்விளைகதிசேர்வழியெனிற்பாவ மியன்றுறுந்தடமதாமன்றோ

உரை — பலவிசேட நீர்த்துறையாடவுங் காலமேயுபாநீராயிறைக்கவும் பலபெயர்களையோதவும் பலவகைப்பெருமணிகளைத்தரிக்கவும் பெருஞ்சடைநீளவளர்க்கவுஞ் சுட்டசாம்பலைப்பூசவுஞ் செத்தவர்க்கெள்ளும்பாலு மிறைக்கவு மித்தொகைப்பட்டவற்றைச் செய்தமாத்திரத்திற் கோடிபாவஞ்செய்திருந்தாலுந் தப்பாமல் வான்மேற்கதியைச்சேரலாமென்றெண்ணினகாலத்துச் சகலபாவந்தொடர்ந்துவரும் வழியாமல்லோவென்க (௱)

இவ்வழியெளிதிற்புரையெலாந்திரு மென்றுளிபுரையி
ர்மற்சாய்

செவ்வழியொழிந்தமன்னுயிர்கெடவோர் செயிர்வழிகாட்
டவோவேண்டு
மொய்வ்வழியருவிமுன்னுளவிழியின் முடுகிவந்தோடவுநா
மோ [டுஞ்சடத்தான்
அவ்வழிகாட்டல்வேண்டுமென்றுரைத்தானறிவளவுருங்கொ

உரை — சொன்ன பொய்யானவறத்தின்வழியாற்செய்த வெண்ணப்படாத பாவமெல்லா மெளிதாய்த்தீருமென்று நிச்சயமாய்நினைத்தபின்பு பாவத்தின்மேற்சாய்ந்த குணத்தோடு செவ்வுவழியைவிட்டொழுகு மனிதரெல்லாருங்கெடும்படி பாவத்தின்வழியைக்காட்டவேணுமோ வில்லையே, அதெங்ஙனமெனின் லோடிவரும்புனல் தனக்குமுன்னுள்ள பள்ளத்திலேவீழ்ந்து முடுகியோடும்படி தாம்வழியையதற்குக்காட்டவேணுமோ வில்லையென்றான் கூர்ந்தவறிவினைத்த கொடியவஞ்சனையுள்ள கரோதானென்க. (௱௧)

சடக்கலியெனும்பேய்மற்றெலாங்களிப்பிற் சருக்கொ
டுசெருங்கடலோதம் [மசனி
படக்கலிதளிர்ப்பவுகளிமுன்பாய்ந்தான் படரிருண்முகிறரு
யடக்கலியெடுத்தார்த்தறிவறைபோக்கி டழலைறயலகைகா
ணெஞ்சம் [றெசித்திடைகாணான்.
கெடக்கலியென்றுமருட்டினர்வென்றே கேதமொன்

உரை — இவையெலாமாசையின் மற்றப்பேய்கள்களிகூர்ந் தாங்காரமாய்க் கடலினொலியினுங்கடிதார்த்திருப்பச் சடக்கலியென்னும்பேய் குதித்துமுன்னேபாய்ந்து மேகத்திடியினுமுழங்கச்சொல்லும். அப்பனிறைமையாங்கிச் சினத்தழன்றபேய்களே நெஞ்சுபிளந்துகெடும்படி முழக்கமுமென்ன? மனநோம்படிமயக்கமுமென்ன! எசித்திடத்துநமக்கொருகேடும்வந்ததுகாணேனென்றனென்க (௱௨)

மதிவளருணர்வற்றெசித்தனர்முன்னாள் வதைவளர்நரகி
டைவீழ்த்தார் [ங்குலைக்குந்,
நிதிவளர்கோயிலவீழ்த்துதாம்வீழ்ந்த நிலைமையுங்குலையா

துறவினர்மறையுமுணர்ந்தபின்வீழ்ந்து துகளுறுமெண்மடங்
கெழுச்சடவான் [மென்றான்.
பதிவளரிறைவற்கிகழ்ச்சியுநமக்கோர் பழிவளர்களிப்புமா

உரை — இப்பொழுதெசித்திடத் தெமக்குக்கேடுவாராம
லுந்தேடினபாவத்திலாபமாயிற்று. அதெங்ஙனமென்னின்மு
ன்றுறவிலசித்தார் றிவின்றிநரகத்தில்வீழ்ந்தார், இனிநமக்
குககட்டியிருந்த பொற்கோயிக்கவர்ந்தகர்ந்து - அவ்வணங்
கய தேவராகிபதாமும் வீழ்ந்தொடினமையுமறிந்து - அ
ங்கேசேர்ந்தகுசைமாமுனி யவர்க்குச்சொல்லிக்காட்டும் பு
கழ்ப்பட்ட மெய்யானவேதத்தின்றன்மையுமறிந்து நரகில்
விழவேயவராறிந்துகட்டிக்கொள்ளுமபாவ மெட்டத்தனைய
திகமாகி வான்மேவுந்தளுதிபகடவுளுக் கிகழ்ச்சியுநாமவர்மே
லவத்தபழிக்களவாக நமக்குமகிழ்ச்சியுமாமல்லவா வென்
றானென்க (௱௩)

ஐவகைப்பொறியும்வாட்டியகுசை யறையுநூலுணர்வி
யாலன்றோ [னவரசன்
மெய்வகைத்தவத்துநிலைபெறினின்பம் விளையுமோநமக்கெ
பொய்வகைச்சடத்துநான்புகுதவெசித்தார் புரையுறவவன்
மொழிபழித்துச் [விழீண்டே.
செய்வகைத்திறத்துநிற்பமோவென்னச் செப்பினான்சடக்க

உரை. — அவற்றைக்கேட்டுப் பேய்க்கரசன் பஞ்சேந்
திரியங்களைவாட்டிய குசைமாமுனி யெசித்திலசொல்லிக்கா
ட்டும் வேதநூலுணர்வையக்கொண்டவர் மெய்யிற்றெளிந்து
தவத்திலேநிலைகொண்டாராகி லெப்பொழுது நீசொனபடி
நமக்குமகிழ்ச்சியாகுமோ இல்லையென்றான் எச்சநகர்க்குச்
சடக்கலி பொய்யிற்பொலிந்தவஞ்சனைவழியானுங்கேபோ
யவர் மீளவும்பாவத்தில்விழும்படி டசகுசைசொல்லுமுழு
திமொழிகளைப்பழித்துவறுமையி லென்றிறத்தெதிராகப்பூ
மனிற்பாரோவென்று மீளவுஞ்சொன்னானென்க. (௱௪)

• தொக்கணிமுடியுங்கொடிச்சடைச்சிரமுங் குண்டல
ச்செவியும்வெண்பலியை

மிக்கணிநுதலும்பொறியமேந்தவத்து மெலிவொடுவாடியமு
கமு [னையத்
மக்கணிமார்புந்தண்டொடுகோரக வங்கையுமிவற்றொடுமறை
தொக்கணிவேடமுனிவரனெனநான் றோன்றியாங்கெவரை
யும்வெல்வேன்

